**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் - 2017**

---

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்ததில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரசாங்க விவசாய கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 16**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான வினைத்திறனான ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக ரூபா 20,623,892 தொகையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை இலங்கை கணக்கீட்டு நியம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 74 ஆம் பிரிவின் பிரகாரம் கடனுக்கான பிணையாக வைக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 10,000,000 கடனைப் பெற்றுக்கொள்வதற்காக பிணையாக வைக்கப்பட்ட புத்தளத்தில் அமைந்துள்ள ''வண்ணாத்திவில்லு'' தோட்டம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

முழுக் கடன்பட்டோரில் 3.53 சதவீதத்தை அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் கணக்கீட்டுக் கொள்கைளின் கீழ் இனங்காணப்பட்டிருந்தும் 05 ஆண்டுகளை மிகைத்த கடன்பட்டோர்களுக்கான நட்டத்தை இனங்காணல் அல்லது அறவிடமுடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 5 ஆண்டுகளை மிகைத்த ரூபா 10,426,696 தொகையான 07 கடன்பட்டோர் மீதிகளுக்காக நட்டத்தை இனங்காணல் அல்லது அறவிட முடியாத கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வூதிய பணிக்கொடை பிரதி பலன்களை காலக் கணிப்புச் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 9,436,077 தொகையாக காலக் கணிப்பு இலாபத்தை ஒதுக்கமாகக் காட்டுவதற்குப் பதிலாக ஆண்டிற்கான வருமானத்திற்குச் சேர்த்துக்கொண்டதனால் ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் அரை நிரந்தர கட்டிடங்கள் (Semi. Permanent Buildings) ஒரு ஆண்டிற்கு 33 1/3 சதவீதத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 537,670 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக விற்பனை நிலையம் ஒரு ஆண்டிற்கு 3 சதவீதத்தில் பெறுமானத் தேய்வு செய்ததன் காரணமாக ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 163,075 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எலுவன்குளம் விதைப் பூங்காவையும் கிரான் சுற்றுலா விடுதியையும் நிர்மாணிப்பதற்குரிய பொறியியலாளரின் சான்றுபடுத்தலின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,934,221 கூட்டு மொத்தமான பணம் நிதிக்கூற்றுக்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாகவும் செலுத்த வேண்டிய செலவுக்களாகவும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) எலுவன்குளம் விதைப் பூங்காவை நிர்மாணிப்பது தொடர்பாக மீளாய்வாண்டின் போது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 109,440 தொகையான நிறுத்திவைத்தல் பணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) தலைமை அலுவலக கட்டிடத்தின் மாதாந்த வாடகையான ரூபா 375,000 பணத்தை செலுத்தும் போது ரூபா 93,750 தொகை வைப்பு பணத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் இரண்டு திசெம்பர் மாதங்களில் அக்கழித்தல்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாததன் காரணமாக செலுத்த வேண்டிய வாடகைக் கணக்கின் மீதியும் வைப்புக் கணக்குகளின் மீதியும் ரூபா 187,500 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வழங்குனர்களால் விநியோகித்து பொருட்கள் பெறுவனவு பத்திரம் வழங்கபபட்ட ரூபா 1,007,325 தொகையான 04 வாயு சீராக்கி இயந்திரங்கள், 05 கணனிகள் என்பன சொத்துக்கள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் 03 மோட்டார் வாகனங்களுக்கு வில்லுத் தகடு செய்தல், பிரேக் செய்தல் ஆகிய பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,016,765 செலவுகளின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டிய 5 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3,500,000 தொகையான கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் செலுத்த வேண்டிய ரூபா 1,699,709 தொகையான கணக்காய்வு கட்டணத்துள் 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 499,805 மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க உழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்பு பணத்தை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டுகளுக்காகவும் சேமலாப நிதியத்திற்கான ஊழியர் பங்களிப்பு ரூபா 242,873 தொகையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு ரூபா 28,633 தொகையும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நிதியங்களுக்குச் செலுத்தப்படாது கையில் வைத்திருக்கப்பட்டன. |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் அதிகாரச் சட்டம் | பணிக்கொடைப் படிகள் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு நடைமுறை ஆண்டின் போது 13 நாட்களிலிருந்து 47 நாட்கள் வரையான தாமதத்தில் அப்படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் மற்றும் 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டம் | பொருட்களை வழங்குகின்ற மற்றும் பொருட்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனமாக இருக்கும் போதும் காலாண்டிற்கான புரள்வு ரூபா 3 மில்லியனுக்கு அதிகமாகவும் அல்லது வருடாந்த புரள்வு ரூபா 12 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் போது பெறுமதி சேர் வரி மற்றும் நாட்டை கட்டியெழுப்பும் வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க தேசிய உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | கூட்டுத்தாபனம் வருமான வரி கடப்பாட்டின் கீழுள்ள ஒரு கூட்டுத்தாபனமான போதிலும் 2011/2012 இலிருந்து 2016/2017 வரையான 6 மதிப்பீட்டு ஆண்டுகளுக்குரிய வருமான வரிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 76,890 மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை. | ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நெதகமுவ செயன்முறை நிலையத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 15 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ரூபா 31,219 விழா முற்பணங்கள் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டிற்கான செலவுகளுக்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 42,335,721 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 36,525,411 ஆக இருந்தனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையில் ரூபா 5,810,310 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வர்த்தகப் பிரிவின் மொத்த இலாபம் ரூபா 5,489,581 ஆல் குறைவடைதல் இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 9,344,801 ஆக காணப்பட்ட தேறிய நட்டம் உயர்ச்சியடைந்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 42,335,721 ஆக இருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 73,423,693 தொகையான பங்களிப்பு உயர்ச்சியடைந்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 83,261,486 ஆக இருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| | 2017 | 2016 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.39:1 | 3.20:1 |
| சராசரி கடன் தீர்த்து வைத்தல் காலம் (நாட்கள்) | 127 | 86 |
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 21 | 28 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது நடைமுறைச் சொத்துக்களின் மூலம் நடைமுறைப் பொறுப்புக்களை உள்ளடக்கும் சந்தர்ப்பம் 3.2 தடவைகள் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் போது அது 1.39 தடவைகள் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் சராசரிக் கடன் தீர்த்து வைக்கும் காலம் 86 நாட்களிலிருந்து 127 நாட்கள் வரை அதிகரித்திருந்தது.

(ஆ) மொத்த இலாப விகிதத்தை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டின் போது 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது விற்பனைக் கிரயம் ரூபா 11,535,029 ஆல் அதிகரித்தல் மொத்த இலாப வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கு காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

கூட்டுத்தாபனத்தினால் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை விஸ்தரித்தல் மற்றும் தேசிய உற்பத்தியை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 2000 ஆம் ஆண்டிலிருந்து நாடுமுழுவதும் மரமுந்திரிகைப் பயிர்செய்கை நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியிருந்ததுடன் அதற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான 3 ஆண்டுகளின் போது ரூபா 191,152,222 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் புத்தளம், குருநாகல், அநுராதபுரம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு 2014,2015, 2016 ஆகிய ஆண்டுகளின் போது 304,640 கூட்டு மொத்த மரமுந்திரிகை நாற்றுக்கள் பகிரிந்தளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது அவதானிக்கப்பட்டிருந்த வழங்கப்பட்ட செடிகளில் 143,325 செடிகள் மாத்திரம் காணப்பட்டது. அதாவது செயல் முன்னேற்றம் 47 சதவீதமாகக் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரிய கூட்டுத்தாபனத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கங்களின் பங்களிப்பு பணமாக ரூபா 886,840 மொத்த தொகை ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் சங்கத்திற்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1982 இன் 03 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படிகளைக் கவனத்திற்கு எடுத்து பங்களிப்பு பணத்தை கணிப்பீடு செய்யாததன் காரணமாக 2006 சனவரியிலிருந்து 2013 யூலை வரையான காலத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,138,508 மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 569,253 செலுத்தப்பட்டடிருந்தது.

### 4.3 சொத்துக்கள் கட்டுப்பாடு

முன்னாள் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 148,135 பெறுமதியான 07 நடமாடும் தொலைபேசிகளை மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வீரவிலையில் அமைந்துள்ள ஒரு காணியில் ஒரு பிராந்திய அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 49,680 செலவில் 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி கேள்விகளைக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தும் பின்னர் அந்த நிர்மாண வேலையைக் கைவிட்டதன் காரணமாக அச் செலவு விளைவற்ற செலவாக இருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளய்வாண்டு தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தெரிவித்திருக்காததன் காரணமாக அச் செயற்பாடு சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள், மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய உச்ச நிலைகளும் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்வதனை அளவீடு செய்து பார்ப்பதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள்

மட்டக்களப்பு கிரானிலுள்ள சுற்றுலா விடுதியின் பயன்பாட்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 490,950 தொகையான மனைப் பொருட்களும் ரூபா 410,000 தொகையான 04 வாயு சீராக்கி இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அக் கொள்வனவுகள் வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுததாபனத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சில இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை. |
| | (ii) பேரேட்டிற்காக நாட்குறிப்புக்களை உள்ளடக்கும் போது நிதி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமை. |
| | (iii) நாட்குறிப்புக்களை ஈடுபடுத்தும் போது அதற்குரிய துணை ஆவணங்கள் இணைக்கபட்டிருக்காமை |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) வாகனங்களின் எரிபொருள் பரீட்சிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்காமை. |
| | (ii) வாகன சம்பவ குறிப்பு புத்தகங்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |